பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 01 சனிக்கிழமை 15.03.2025 கதிர் 127

## இனி இது ரகசியம் அல்ல!

தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு நாடாளுமன்றத்தில பட்டியல் வெளியிடும் பணியை இன்னும் நிறுத்தவில்லை. இருந்தாலும் அந்தப் பட்டியல்களில் 2

# மிலேச்சத்தனமான படுகொலைகளை நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்

### எதிர்க் கட்சித் தலைவர் சபையில் வலியுறுத்து

நாட்டில் இடம்பெற்றுவரும் மிலேச்சத்தனமான மனிதப்படுகொலை கலாசாரத்தைநிறுத்துவதற்குஆளும்தரப்பு நடவடிக்கைஎடுக்கவேண்டும். அதற்காக நாங்கள் பூரண ஆதரவை வழங்க தயாராக இருக்கிறோதென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.



நாட்டில் சட்டம் ஒழுங்கைச் சீர்குலைக்கும் வகையில் இடம்பெற்று வரும் கொலைகள் தொடர்பில் நேற்று வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் விசேட கூற்றொன்றைமுன்வைத்து உரையாற்றியபோது இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொது மக்கள் பாதுகாப்பைஉறுதிப்படுத்தும் தூண்கள் பொலிஸ் மற்றும் நீதிமன்றம். இந்த இரண்டு தூண்களும் தற்போது பயங்கர அச்சுறுத்தல்களுக்குஆளாகிஇருக்கின்றன. 8

## இலங்கை நிறுவனம் மீது அமெரிக்கா தடை விதிப்பு

ஈரானியஎண்ணெய்யைசீனாவிற்குகொண்டு செல்ல உதவியதற்காக இலங்கை நிறுவனம் ஒன்றின் மீது அமெரிக்கா தடை விதித்துள்ளது.

அணு ஆயுதத் தயாரிப்புக் காரணமாக ஈரானின் எண்ணெய் விற்பனைக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் ஈரான் களவாகச் சந்தையில் எண்ணெய் விற்பனை செய்து வருகின்றது. அப்படி சீனாவிற்கு 'ஷானன் 2' கப்பல் மூலம் எண்ணெய் கொண்டு செல்லப்பட்டுள்ளது. இதற்கு தொழில்நுட்ப மேலாளராகப் பணியாற்றிய இலங்கை நிறுவனமான 'மரைன் சொல்யூஷன்ஸ்' நிறுவனம் மீதே அமெரிக்கா தடைகளை விதித்துள்ளதாக இலங்கையில் உள்ள அமெரிக்க தூதரகம் அறிவித்துள்ளது. 2

## ஏறாவூரில் போட்டியிடுவதற்காக சாலி நலீம் எம்.பி. பதவி விலகல்

கட்சித் தலைமையின் வேண்டுகோளுக்கிணங்க ஏறாவூர் நகர சபையின் வேட்பாளராக போட்டியிடுவதாகவும், அதற்காக நாடாளுமன்ற உறுப்புரிமையை இராஜினாமா செய்கிறார் எனவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான மொஹமட் சாலி நலீம் சபைக்கு அறிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வரவு செலவுத் திட்டத்தின் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார்.

என்னை நம்பி எனது கட்சித் தலைமையால் எனக்கு ஒப்படைக்கப்பட்ட தேசியப் பொறுப்பை, எனக்கு அங்கீகாரம் வழங்கிய எனது மண்ணின் மக்களுக்கும் கட்சிக்கும் சமர்ப்பணம் செய்த ஒரு 2

## ரணிலிடம் இருந்து விரைவில் அறிக்கை

பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் விசேட அறிக்கை ஒன்று வெளியிடப்படவுள்ளது.

நாடாளுமன்றில் நேற்று அமைச்சர் பிமல் ரத்நாயக்கவினால் பட்டலந்த ஆணைக்குழுஅறிக்கைசமர்ப்பிக்கப்பட்டது. எனவே,இந்தபட்டலந்தஆணைக்குழு 2

### ஆளும்தரப்புக்கு அரசியல் இலாபம் கிடைக்கக்கூடிய சம்பவங்களை மட்டுமன்றி

# மனித உரிமைகளின் மீறல்கள் அனைத்தையும் விசாரியுங்கள்

### ஜனாதிபதியிடம் மனோ வலியுறுத்து

ஆளும்தரப்புக்குஅரசியல்இலாபம் கிடைக்கக்கூடியதேர்ந்தெடுக்கப்பட்ட சம்பவங்கள் பற்றி மாத்திரமின்றி அனைத்து மனித உரிமை மீறல்கள் குறித்தும்விசாரணைகள்முன்னெடுக்கப்பட வேண்டும். ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பொதுவான ஆணைக்குழுவொன்றை நியமித்து விசாரணைகளை



முன்னெடுக்கவேண்டும் என 2

## 16,000 ஏக்கர் நிலப்பரப்பில் தெங்கு முக்கோண வலயம்

### வடக்கில் அமைக்கப்படும்

வடக்கு மாகாணத்தில் 16 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் தெங்கு முக்கோண வலயம் அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கு 5500 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இலவசமாக தென்னங்கன்றுகள் மற்றும் உரம் வழங்குவதற்காக 819 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதோடு நீர் விநியோகித்துக்கும் நிலப்பரப்புக்கு அமைய நிவாரணம் வழங்கப்படும் என்று பெருந்தோட்டத்துறை மற்றும் சமூக உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வரவு, செலவுத் திட்டத்தின் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்புவசதிகள்அமைச்சு மீதான விவாதத்தில் 2

## மாவட்ட ஆட்சி அதிகாரம் மண்ணின் கட்சிகளுக்கே

### தமிழ் அரசு எம்.பி. சத்தியலிங்கம் தெரிவிப்பு

எமது மாவட்ட ஆட்சி அதிகாரம் இந்த மண்ணின் கட்சிகளுக்கு கிடைக்க வேண்டும் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் தேர்தல் கட்டுப்பணத்தை செலுத்திய பின் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை தவிர்ந்த அனைத்து சபைகளிலும் வவுனியாவில் தமிழ் அரசுக் கட்சி போட்டியிடுகிறது. எல்லாச் சபைகளிலும் நாங்கள் வெற்றி பெறுவோம் என நம்புகிறோம். எமது மாவட்டம் ஒரு எல்லைப்புற மாவட்டம். எமது மாவட்ட ஆட்சி அதிகாரம், எமது பூர்வீகம் இந்த மண்ணின் கட்சிகளுக்கு கிடைக்க வேண்டும்.

அந்தஅடிப்படையல்இந்தமாவட்டத்தில் போட்டியிடுகின்றோம். இந்த மக்களின் தேவைகள் பூர்த்தி செய்து அபிவிருத்தி நோக்கி நகர்வோம். அர்ப்பணிப்புடன் செயற்படக் கூடிய வேட்பாளர்களை தெரிவு செய்துள்ளோம்.

எல்லாச் சபைகளிலும் தமிழ் தேசிய கட்சிகளுடன் சேர்ந்து பயணிக்க வாய்ப்புள்ளது. எமது மத்திய 2

### மன்னார் காற்றாலை விவகாரம்;

## அதானி நிறுவனத்தின் பதில் பரிசீலனை செய்யப்படுகிறது

இலங்கையில்காற்றாலை மின்னுற்பத்தி கருத்திட்டம் தொடர்பில் இந்தியாவின் அதானி நிறுவனம் தமது நிலைப்பாட்டை அனுப்பி வைத்துள்ளது. அதன் உள்ளடக்கத்தை பரிசீலனை செய்து, ஆளும்தரப்பின் தீர்மானத்தைவெகுவிரைவில் சபைக்கு அறிவிப்போம். குறித்தகருத்திட்டம்தொடர்பில் 2023.08.23ஆம்திகதியன்று வழங்கப்பட்ட அமைச்சரவை அனுமதியில் காணப்படும் சிக்கல்கள் பரிசீலனை செய்யப்படுகின்றன என சக்தி வலுத்துறை அமைச்சர் குமார ஜயகொடிதெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில்நேற்று நடைபெற்ற அமர்வின்போது வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட 2

## அபிவிருத்தியில் பெண்கள் பங்கேற்பை கட்டுப்படுத்தும் தடைகள் உடைக்கப்படும்

### பிரதமர் ஹரினி தெரிவிப்பு

தேசிய அபிவிருத்தியில்பெண்கள் வகிக்கும்முக்கிய பங்கை உணர்ந்து, பொருளாதாரத்தில் பெண்கள் முழுமையாகப் பங்கேற்பதைக் கட்டுப்படுத்தும் தடைகளை உடைப்பதில்ஆளும்தரப்புஉறுதியாக உள்ளதாகபிரதமர்ஹரிணிஅமரசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

இப்போதெல்லாம் தமிழ் மக்களுக்குப் பெரிதாக ஆர்வம் எதுவும் இல்லை. குறிப்பாக, ரணில் விக்கிரமசிங்கவால் அரசியல் லஞ்சமாக மதுச் சாலைகளுக்கான அனுமதி அரசியல்வாதிகளுக்கு வழங்கப்பட்டது என்று சொல்லிவிட்டு, மதுச் சாலைகளின் உரிமங்களைவாங்கியவர்களின்பெயர்களை மட்டுமே ஆளும்தரப்பினர் வெளியிட்டார்கள். அதில் ஓர் அரசியல்வாதியின் பெயர்கூட இல்லை. இப்போது வரைக்கும் அரசியல் லஞ்சம் வாங்கிய அரசியல்வாதிகள் யார் என்பதைப் பகிரங்கப்படுத்தவே மாட்டோம் என்று அடம்பிடிக்கிறார்கள். அதற்கு பின்கதவு இணக்கப்பாடுகள் காரணம் என்று கதைகள் அடிபடுகின்றன. குறிப்பாக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களில் சலரைக் காப்பதற்காக இந்தப் பட்டியலைப் பகிரங்கப்படுத்தாமல் வைத்திருக்கிறார்கள் என்றெல்லாம் கதைகள் உண்டு. வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்த தேசிய மக்கள் சக்தி அல்லாதவர்களோடு இந்த விவகாரத்தைத் தொடர்புபடுத்தும் கதைகளும்கூட உலவுகின்றன.

எதுஎப்படியிருந்தாலும்ஆளும்தரப்புதனது உப்புச்சப்பற்றபட்டியல்களைவெளியிடுவதை நிறுத்தவில்லை. அப்படி இப்போதும் ஒரு பட்டியலை வெளியிட்டுள்ளார்கள்.

விவசாயத் திட்டங்கள் என்ற போர்வையில் அரசியல்வாதிகள், அவர்களது கூட்டாளிகள் மற்றும் அதிகாரிகள் சமீபத்தில் கோடிக்கணக்கான ரூபாய் பணத்தையும் அரச நிலங்களையும் பெற்றுவிட்டு எந்தத் திட்டத்தையும் செயல்படுத்தாமல் அந்தக் காணிகளையும் பணத்தையும் தனிப்பட்ட தேவைகளுக்குப் பயன்படுத்தியுள்ளனர் என்று பெருந்தோட்ட மற்றும் சமூக உள்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யா ரத்ன நேற்று நாடாளுமன்றத்தில் ஒரு பட்டியலை வெளியிட்டுத் தெரிவித்தார்.

மேலும், இந்த விவகாரம் குறித்து விசாரணை நடத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

முன்னாள்அமைச்சர்சாலிந்ததிசாநாயக்க, குருநாகல்பெருந்தோட்டநிறுவனத்திடமிருந்து 76 ஏக்கர்வளமானநிலத்தை அவர் தனிப்பட்ட முறையில் நிறுவிய நிறுவனத்திற்காகக் கையகப்படுத்தியுள்ளார் எனவும் அமைச்சர் கூறினார்.

முன்னாள் அமைச்சர் அருந்திக பெர்னாண்டோவின் நண்பர் ஒருவருக்கு குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்திற்குச் சொந்தமான இருபத்தொரு ஏக்கர் வளமான நிலம் தரிசு நிலம் என்று பொய்யாகக் காட்டப்பட்டு வழங்கப்பட்டதாகவும், அதில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச கையெழுத்திட்டுள்ளார் எனவும் அவர் கூறினார்.

முன்னாள் கைத்தொழில் அமைச்சர் தயா கமகேயின் மனைவி அனோமா கமகே, விவசாயத் திட்டத்திற்கு எனக்கூறி நூற்று நாற்பது மில்லியன் ரூபாயைப் பெற்றுள்ளார் எனவும், ஆனால் எந்தத் திட்டமும் செயல்படுத்தப்படவில்லை என்றும் அமைச்சர் கூறினார்.

முன்னாள்கடற்படைத்தளபதிவசந்தவசந்த கரன்னாகொடவுக்குஒருவிவசாயத்திட்டத்தை மேற்கொள்வதற்காக 180 மில்லியன் ரூபாய் வழங்கப்பட்டதாகசமந்தவித்யாரத்னகூறினார், மேலும் முன்னாள் அமைச்சின் செயலாளர் பந்துல விக்ரமாராச்சியின் மகனுக்கு ஒரு திட்டத்திற்காக எண்பத்தி இரண்டு மில்லியன் ரூபாய் வழங்கப்பட்டதாகவும் கூறினார்.

இவ்வாறு மோசடி செய்யப்பட்ட பணம் மற்றும்நிலங்கள்திரும்பப்பெறப்படுமாஎன்பது பற்றி அமைச்சர் எதுவும் தெரிவிக்கவில்லை.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## மனித....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார்.

அவர், கொழும்பில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து இதனைத் தெரிவித்தார். மேலும் தெரிவித்ததாவது:

படலந்த வதை முகாம் தொடர்பான அறிக்கைசட்டமாஅதிபரிடம்சமர்ப்பிக்கப்பட்டு, அதுதொடர்பில்வழக்குதொடரப்படவேண்டும். அங்கு இடம்பெற்ற கொலைகள் உள்ளிட்ட குற்றச்செயல்கள்தொடர்பில்ஆராயவேண்டும். எனினும்படலந்தவதைமுகாம்பற்றிமாத்திரம் ஏன் விசாரிக்க வேண்டும் என்ற கேள்வி தமிழ் மக்கள் மத்தியில் காணப்படுகிறது.

1948ஆம் ஆண்டிலிருந்து பல்வேறு சந்தர்ப்பங்களில் தமிழர்களுக்கு எதிரான குற்றச்செயல்களும் இடம்பெற்றுள்ளன. அதன் பின்னர் வெலிக்கடை சிறைச்சாலை படுகொலை, இறுதிப் போரின்போது தமிழர்கள் கொல்லப்பட்டமை, குடும்பத்தோடு சென்று இராணுவத்திடம் சரணடைந்தவர்கள் கொல்லப்பட்டமை, கொழும்பில் இடம்பெற்ற கொலைகள், கடத்தல், காணாமல்ஆக்கப்படுதல் என்பன தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

இவை மாத்திரமின்றி சர்வதேச அளவில் பேசப்பட்ட இனப்படுகொலைகள் தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும். எனவே படலந்த விவகாரம் தொடர்பில் மாத்திரமின்றி தமிழ், முஸ்லிம் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும். ஆளும்தரப்புக்கு அரசியல் இலாபம் கிடைக்கக்கூடிய தேர்ந்தெடுக்கப்பட்ட சம்பவங்கள் பற்றி மாத்திரமின்றி அனைத்து மனித உரிமை மீறல்கள் குறித்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

நாட்டில் எந்தவொரு பகுதியிலும் பயங்கரவாதமோ அல்லது அரச பயங்கரவாதமோ இருக்கக்கூடாது. விசாரணைகளுக்கு எமது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம். ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பொதுவான விசாரணை ஆணைக்குழுவை நியமித்து ரணிலை மாத்திரமின்றி தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகளை மாத்திரமின்றி ஜே.வி.பி.யினரையும் விசாரணைக்கு உட்படுத்தவேண்டும் - என்றார்.

## மாவட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுவில் ஒரு சின்னத்தின் கீழ் சேர்ந்து பயணிப்பது முடியாத சந்தர்ப்பத்தில், ஆட்சி அமைக்கும் போது தமிழ் தேசியக் கட்சிகள் சேர்ந்து ஆட்சி அமைப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது. இந்த தேர்தல் முறையில் தனிக் கட்சி ஆட்சி அமைக்க முடியாது.

சேர்ந்து பயணிக்கும் நிலைப்பாட்டில் இருந்து தமிழ் அரசுக் கட்சி விலகவில்லை. வவுனியா வடக்கில் சேர்ந்து போட்டியிடுவது தொடர்பில் பேசினோம். சில காரணங்களால் அது சரிவரவில்லை. ஆனால் நிச்சயமாக சேர்ந்து ஆட்சி அமைப்போம் - என்றார்.

## 16,000 ஏக்கர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றியபோது இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேங்காய் விநியோகத்தில் தட்டுப்பாடு காணப்படுகிறதுஎன்பதைஏற்றுக்கொள்கிறோம். ஒருகாலத்தில்இலங்கையில்இருந்துதேங்காய் ஏற்றுமதி செய்யப்பட்டது. ஆனால் தற்போது இறக்குமதி செய்யப்படுகிறது. அரசுக்கு சொந்தமான தென்னந் தோட்டங்களுக்கு கடந்த 5 ஆண்டுகாலமாக உரம் வழங்கப்படவில்லை, தோட்டங்கள் முறையாகப் பராமரிக்கப்படவில்லை என்று எதிர்க்கட்சியினரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

தென்னந் தோட்டங்களை முறையாக பராமரிக்காமல், சிறந்த விளைச்சலை எதிர்பார்க்க முடியாது. சிலாபம் மற்றும் குருநாகல் பகுதிகளில் உள்ள தெங்கு தோட்டங்களை முறையாக பராமரிப்பதற்கு உரிய நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் தெங்கு பயிர்ச்செய்கைக்கு உரிய காணிகள் அரசியல்வாதிகளின் அனுசரணையுடன் துண்டாக்கப்பட்டன. அழிக்கப்பட்டன.

தெங்கு பயிர்ச்செய்கை தொடர்பில் 10 ஆண்டுகால தேசிய கொள்கை திட்டத்தை தயாரிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். வருடாந்தாம் 3000 மில்லியன் தேங்காய்களுக்கான கேள்வி காணப்படுகின்ற நிலையில் கடந்த ஆண்டு 2,754 மில்லியன் தேங்காய்கள் மாத்திரமே உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு 2,900 மில்லியன் தேங்காய்களை உற்பத்தி செய்யவும், 2020 ஆண்டளவில் 4,200 மில்லியன் தேங்காய்களை உற்பத்தி செய்யவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. ரஷ்யா அரசு இலங்கைக்கஇலவசமாகஎம்.ஓ.பிவகையான உரத்தை வழங்கியுள்ளது.

இந்த உரம் தெங்கு பயிர்ச்செய்கைக்கு முழுமையாக வழங்கப்படும். 4,000 ரூபா என்ற நிவாரண விலைக்கு வழங்கப்படும். இதற்கமைய இந்த ஆண்டு 5,700 மில்லியன் ரூபாஅளவில்தெங்குபயிர்ச்செய்கையாளருக்கு நிவாரணம் வழங்கப்படும்.

30 ஆண்டுகாலப் போரை எதிர்க்கொண்ட வடக்கு மாகாணத்துக்கு இதுவரை காலமும் குறைந்தளவான அபிவிருத்திகளே வழங்கப்பட்டன. வடக்கு மாகாணத்தில் 16 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் தெங்கு முக்கோண வலயத்தை அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கு 5,500 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. தென்னை கன்றுகள் இலவசமாக வழங்கப்படும். 10 இலட்சத்து 24 ஆயிரம் தென்னை கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண மக்களுக்கு தெங்கு பயிர்ச்செய்கைக்கு இலவசமாக உரம் வழங்கப்படும். இதற்கு மாத்திரம் 819 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் நீர்விநியோகத்திற்கும்நிலப்பரப்புக்கு அமைய நிவாரணம் வழங்கப்படும். தேயிலை தொழிற்றுறையை மேம்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தேயிலைத் தோட்டங்களை முறையாக பராமரிப்பதற்குநிவாரணம்ஒதுக்கப்பட்டுள்ளது.

தேயிலைத் தோட்டப் பகுதிகளில் உள்ள தரிசு நிலங்களை தனியார் தரப்பினருக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான அமைச்சரவை பத்திரம் எதிர்வரும் வாரம் சமர்ப்பிக்கப்படும். பெருந்தோட்ட பகுதிகளில் இந்திய ஆளும்தரப்பின் உதவியுடன் இந்த ஆண்டு 4,700 வீடுகள் நிர்மாணிக்கப்படும், 1,300 வீடுகள் பகுதியளவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. ஆகவே இந்த ஆண்டு 6,000 வீடுகள் நிர்மாணிக்கப்படும் என்றார்.

## அபிவிருத்தியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சியில் பெண்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். அவர்களின் மகத்தான பங்களிப்பு இருந்தபோதிலும், கட்டமைப்பு தடைகள் பொருளாதாரத்தில் அவர்களின் முழு பங்களிப்பையும் மட்டுப்படுத்தியுள்ளன.

பெண்கள் வணிகத் தலைவர்கள், தொழில்முனைவோர் மற்றும் ஏற்றுமதியாளர்களாக முன்னேறக்கூடிய ஒரு பொருளாதாரத்தை உருவாக்குவதன் மூலம் இந்தத் தடைகளை உடைக்க எமது ஆளும்தரப்பு உறுதிபூண்டுள்ளது .

பெண் தொழில்முனைவோருக்கு உகந்த சூழலைஉருவாக்குவதன்மூலமும், குழந்தை பராமரிப்பு, முதியோர் பராமரிப்பு மற்றும் பெண்களின் பொருளாதார பங்களிப்பைக் கட்டுப்படுத்தும் மாற்றுத்திறனாளி சேவைகள் போன்ற துறைகளை வலுப்படுத்துவதன் மூலமும் பெண்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

## ரணிலிடம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கை தொடர்பான சில விடயங்களை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளியிடவுள்ளார் என்று அவரது அலுவலகம் தெரிவித்துள்ளது.

## ஏறாவூரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரலாற்று பெருமையை இந்த உயரிய சபையில் நிறைவேற்றிய பெருமையுடன் விடைபெறுகின்றேன் என்றார் அவர்.

பதவியைதக்கவைக்கவும்நிலைநிறுத்தவும் விசுவாசத்தையும் நம்பிக்கையையும் காற்றிலே பறக்கவிட்டு அற்ப சலுகைகளை எதிர்பார்த்து கட்சிக்கும் பிறந்த மண்ணுக்கும் வாக்களித்த மக்களுக்கும் தலைகுனிவை உண்டாக்கிவிட்டோர் வரிசையில் சேராது தலைநிமிர்ந்து இந்த உயரிய சபையிலிருந்து விடைபெற்றுக்கொள்கின்றேன் என்றும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

அரசியல் பதவிகளில் கிடைக்கும் ஊதியம், சலுகைகள் என்பன என்னை அங்கீகரித்த மக்களுக்கு உரித்தான ஒன்றாகும். அதனை துளியும் எனக்காக பாவிக்காது மக்களுக்கு வழங்கும் நடைமுறையை 2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபை பிரதிநிதியாக ஏறாவூர் நகரசபையில் முன்னெடுத்து இன்று ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக நடைமுறைப்படுத்தியிருக்கின்றேன். நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகித்த 3 மாத காலத்திற்குள் ஏழரை இலட்சம் ரூபா சம்பளத்தையும் எனக்கு வாக்களித்த மக்களுக்காக நான் பகிர்ந்தளித்துள்ளேன்.

எமது தேசியத் தலைவர் ரவூப் ஹக்கீம், கட்சியினுடைய செயலாளர், கட்சியினுடைய அதியுயர்பீட உறுப்பினர்கள் ஏனையவர்களுக்கும் நான் நன்றிகளை தெரிவிக்கின்றேன். இந்த தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை நான் கேட்காமலேயே என் மீது நம்பிக்கை வைத்து தந்த கட்சித்தலைமைக்கு நான் எந்தக்காலத்திலும் துரோகம் செய்யாது அவ்வாறு துரோகம் செய்தவர்களின் பழியையும் துடைத்து எறிபவனாக கட்சியால் எனக்குவழங்கப்பட்ட இந்த பிரதிநிதித்துவத்தை கட்சி கேட்கின்ற நேரத்தில், கட்சியின் தீர்மானத்திற்கு தலைவணங்குபவன் என்ற அடிப்படையில் எனது இந்த நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை நான் கட்சிக்காக ஒப்படைகின்றேன். பதவி விலகுகின்றேன்.

என்னுடைய கட்சி வேண்டிக் கொண்ட தற்கிணங்க ஏறாவூர் நகர சபையினுடைய வேட்பாளராக நான் போட்டியிடவுள்ளேன். ஏறாவூர் மக்கள் ஒருபோதும் எமது கட்சிக்கு துரோகம் செய்ய மாட்டார்கள். இந்தக் கட்சிக்கு அவர்கள் என்றுமே கடமைப்பட்டவர்கள். அவர்கள் எமது கட்சிக்கு வெற்றியைப் பெற்றுத்தருவார்கள் என்றுகூறி இன்றிலிருந்து நான் எனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகுகின்றேன் - என்றார்.

## இலங்கை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது ஈரானிய பெட்ரோலிய அமைச்சர் மொஹ்சென் பக்னெஜாட்டின் சட்டவிரோத எரிபொருள் வர்த்தகத்தை உலகிற்கு மறைக்க இலங்கை நிறுவனத்தின் செயற்பாடுகள் உதவின என்று அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.

கொழும்பில் அமைந்துள்ள மரைன் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் ஈரானிய எரிபொருளை கொண்டு சென்ற 'ஷானன் 2' கப்பலின் பதிவு செய்யப்பட்ட உரிமையாளரான மார்ஷல் தீவுகளில் பதிவுசெய்யப்பட்ட 'செலஸ்டே மரைடைம்' ஆகியவற்றின் மீது இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

## அதானி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் காற்றாலை மின் சக்தியையும், சூரியமின்சக்தியையும்அதிகரிப்பதற்காக இந்தியாவின் அதானி நிறுவனத்துடன் அல்லது அதன் துணை நிறுவனத்துடன் இலங்கை ஆளும்தரப்பு உடன்படிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது.

சக்தி வலுத்துறையின் 70 சதவீதத்தை புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்கள் ஊடாக உற்பத்தி செய்வதற்காக மன்னார் மற்றும் பூநகரி ஆகிய பகுதிகளில் 484 மெகாவாட் காற்றாலை மின்சக்தி திட்டத்தை இந்தியாவின் அதானி நிறுவனத்தின் முதலீட்டுடன் உற்பத்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்தஒப்பந்தம்தொடர்பில்பங்குதாரர்களுக்கும் உரிய பொறுப்புக்கள் மற்றும் கருமங்களை தனித்தனியாக எடுத்துரைப்பது ஒப்பந்தத்தின் பிரதான நோக்கமாகும். 2009ஆம் ஆண்டு 20ஆம் இலக்க மின்சார திருத்தச் சட்டத்தின் பிரகாரம் போட்டிநிலை விலைமனுக்கோரலின்றி குறித்த நிறுவனம் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சட்டத்துக்கு இணங்க 'ஓர் ஆளும்தரப்புக்கும் பிறிதொரு ஆளும் தரப்புக்கும்இடையில் என்றவரையறைக்குள் இந்த நிறுவனம் உள்ளடங்காது என்பதை

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# வவுனிக்குளத்தில் சடலமாக மீட்கப்பட்ட இளைஞரின் இறப்புக்கு நீதி கோரி முல்லைத்தீவில் ஆர்ப்பாட்டம்

முல்லைத்தீவு நட்டாங்கண்டல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வவுனிக்குளத்திலிருந்து கடந்த ஆண்டு சடலமாக மீட்கப்பட்ட இளைஞனின் கொலைக்கு நீதி கோரி நேற்று (வெள்ளிக்கிழமை) கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

வெளிநாடு செல்வதற்கான பயன ஏற்பாடுகளைச் செய்த 27 வயதுடைய மல்லாவியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கடந்த 29-07-2024 அன்று முல்லைத்தீவு நட்டாங்கண்டல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வவுனிக்குளத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

சடலமாக மீட்கப்பட்ட இளைஞர் கொலை செய்யப்பட்டு குளத்துக்குள் போடப்பட்டதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்தபோதும் அதனுடன் தொடர்புபட்ட கொலையாளிகளை இதுவரை கைது செய்யவில்லை என தெரிவித்து இன்றைய தினம் பிரதேச பொது அமைப்புகள், வர்த்தக சங்கம், பொதுமக்கள் என 300 இற்கும் மேற்பட்டோர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மல்லாவிபஸ்நிலையத்திலிருந்துமல்லாவிபொலிஸ் நிலையம் வரை சென்ற போராட்டக்காரர்கள் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக ஒன்றுகூடி பொலிஸாருக்கு எதிராக கோஷம் எழுப்பினர்.

இதனையடுத்து, அங்கு அமைதியின்மை ஏற்பட்டதுடன் சம்பவ இடத்துக்கு மாங்குளம் உதவி பொலிஸ் அத்தியட்சகர் சென்று, போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடினார்.

அத்துடன்இளைஞரின்மரணம் தொடர்பாக விசாரணைகளை தொடர்ந்து நடத்துவதாகவும் இந்தவிசாரணைகளுக்காகவிசேட குழு ஒன்றை நியமிப்பதாகவும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்ததையடுத்து மக்கள் கலைந்து சென்றனர்.

இதேவேளை போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தங்கள் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் உதவி பொலிஸ் அத்தியட்சகரிடம் கையளித்தனர்.

பின்னர், சம்பந்தப்பட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கொலை செய்யப்பட்ட இளைஞரின் பெற்றோர், உறவினர்களுடன் கலந்துரையாடினர்.

இதேவேளை இந்த ஆர்ப்பாட்டத்தை தடுக்கும்வகையில் மல்லாவி பொலிஸாரால் நீதிமன்ற தடை உத்தரவு பெறப்பட்டதாகவும் கூறப்படுகிறது.







# மட்டக்களப்பு தபால் திணைக்கள ஊழியர்களால் பல கோரிக்கைகளை வலியுறுத்திக் கவனவீர்ப்பு

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தபால் திணைக்கள ஊழியர்கள் நேற்று (வெள்ளிக்கிழமை) மட்டக்களப்பு பிரதான தபால் நிலையத்திற்கு முன்பாக கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

அஞ்சல் தொலைத்தொடர்பு சேவையாளர் சங்கம், அகில இலங்கை தமிழ் பேசும் அஞ்சல் சேவையாளர் சங்கம் என்பன இணைந்து நாடளாவிய ரீதியில் போராட்டத்தினை முன்னெடுத்தது.

அந்த வகையில் மட்டக்களப்பு தபால் திணைக்களத்திற்கு முன்னால் தபால் திணைக்கள தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து நேற்று மதியம் கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

கடந்த வருடம் அமைச்சரவையில் தபால் தொழிற்சங்கங்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி தருவதாக உறுதியளித்த விடயங்களைத் தபால் திணைக்களத்தின் ஊடாக இதுவரை நடைமுறைப்படுத்தாமல் இருப்பதை முன்னிட்டு இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அனைத்து தரப்பு வெற்றிடங்களையும் உரிய முறையில் நிரப்ப வேண்டும், அமைச்சர் உறுதி அளித்த விடயங்களை உடன் நிறைவேற்ற வேண்டும், பதவி உயர்வுகளுக்குக் காலம் தாழ்த்தாது உடன் வழங்க வேண்டும், தபால் திணைக்கள புதிய நியமன முறையை உடன் அமல்படுத்த வேண்டும் என்கின்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எதிர்வரும் 16ஆம் திகதி நள்ளிரவு முதல் 18 ஆம் திகதி நள்ளிரவு வரையான காலப் பகுதியில் தொழிற்சங்க நடவடிக்கை போராட்டத்தினை நடைமுறைப்படுத்த இருப்பதாகவும் இவ்வார்ப்பாட்டத்தின்போது தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.






# வீதிகளைப் புனரமைப்புச் செய்யாமல் எந்த அபிவிருத்தியும் சாத்தியமில்லை

## வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு

வீதிகளைப் புனரமைப்புச் செய்யாமல் எந்தவொரு அபிவிருத்தியும் சாத்தியமில்லை. வீதி அபிவிருத்தி மிக மிக முக்கியமானது என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.



பருத்தித்துறை - பொன்னாலை வீதியில், தொண்டைமனாறு அரசடி முதல் பருதித்தித்துறை துறைமுகம் வரையிலான வீதியின் புனரமைப்பு அங்குரார்ப்பண நிகழ்வு வல்வெட்டித்துறை சந்தியில் வியாழக்கிழமை நடைபெற்றது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே வடக்கு மாகாண ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடற்கரையோரமாகச் செல்லும் இந்த வீதியின் பாதுகாப்புச் சுவர்கள் கூட கடந்த காலத்தில் விழுந்துள்ளன. மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட இந்த வீதி புனரமைக்கப்படுவது முக்கியமானது. மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி வீதிப் புனரமைப்புக்கு நிதி கோரியிருந்தார். அதற்கு அமைவாக நிதியும் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இதற்காக ஜனாதிபதிக்கும், நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவுக்கும் வடக்கு மக்கள் சார்பில் இந்த நேரத்தில் நன்றிகளைக் கூறுகின்றேன். அரசாங்கம் வடக்கு மாகாணத்தின் வீதி அபிவிருத்திக்காக இந்த ஆண்டுக்கு மாத்திரம் 5,000 மில்லியன் ரூபாவை ஒதுக்கியிருக்கின்றது. எதிர்காலத்தில் இங்கு பல வீதிகள் அபிவிருத்தி செய்யப்படும் என்றார்.

இந்த நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், ஜெ.ரஜீவன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், யாழ்.மாவட்டச் செயலாளர் ம.பிரதீபன், பருத்தித்துறை பிரதேச செயலாளர் சத்தியசீலன் ஆகியோர் கலந்துகொண்டனர்.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அரைகுறை செயற்பாடுகளுக்கான நேரம் முடிந்துவிட்டது

இலங்கை வன்முறை குற்றங்களில் ஒரு ஆபத்தான எழுச்சியை எதிர்கொள்கிறது, வாள்வெட்டுக் கும்பல் தொடர்பான கொலைகள், படுகொலைகள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் முன்னெப்போதும் இல்லாத அளவை எட்டியுள்ளன. கடந்த மூன்று மாதங்களில் மட்டும், துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் குறைந்தது 13 நபர்கள் கொல்லப்பட்டுள்ளனர், இது நாடு முழுவதும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்த சம்பவங்களில் மிகவும் துணிச்சலானது நீதிமன்ற அறைக்குள் ஒரு பிரபல பாதாள உலகக் குழுவின் தலைவரான கனேமுல்ல சஞ்சீவவின் படுகொலை ஆகும். இது சட்டத்தரணி வேடமணிந்து வந்த நபரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலாகும். இத்தகைய வெட்கக்கேடான தாக்குதல்கள் நாட்டின் பாதுகாப்பு இயந்திரம் மற்றும் சட்ட ஒழுங்குக் காவலர்களின் திறன்கள் குறித்து கடுமையான கவலைகளை எழுப்பியுள்ளன.

இத்தகைய கொலைகளைத் தடுத்த நிறுத்த தேசியத் திட்டம் ஒன்று வேண்டும் என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்றும் நாடாளுமன்றத்தில் வலியுறுத்தியுள்ளார். கடந்த இரு மாதங்களில் பல தடவைகள் அவர் இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் பேசியுள்ளார். தொடரும் கொலைகளுக்காக ஆளும்தரப்பைக் கண்டித்துள்ளார். தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துமாறும் விலியுறுத்தி வந்திருக்கிறார். ஆனால், இந்தக் கொலைகளால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏதும் இல்லை என்று கூறிக்கொண்டு கொலைகளைக் கட்டுப்படுத்த ஆளும்தரப்பு அக்கறை காட்டவில்லை என்பது நேற்றுவரையில் தொடரும் கொலைகளில் இருந்து நிரூபணமாகின்றது.

கொலைகள் குறித்த புள்ளிவிவரங்கள் ஒரு மோசமான படத்தையே வரைகின்றன. 2024ஆம் ஆண்டில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களால் 103 க்கும் மேற்பட்ட உயிர்கள் இழக்கப்பட்டிருக்கின்றன. கொழும்பு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஒரே நாளில் பல கொலைகள் நடந்துள்ளன. வன்முறை அலை மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது, அவர்கள் இப்போது தங்கள் சொந்த சமூகங்களில் பெருமளவில் பாதிக்கப்படக்கூடியவர்களாக உணர்கிறார்கள்.

சட்ட ஒழுங்குக் காவலர்கள் குற்றவியல் வலைப் பின்னல்களை ஒடுக்குவதாகக் கூறினாலும், இதுபோன்ற கொலைகள் தொடர்ந்து நடப்பது இந்த முயற்சிகள் குறைந்த வீரியம் கொண்டவை என்பதையே குறிக்கிறது. சமீபத்திய தொடர்ச்சியான படுகொலைகள் உளவுத்துறை மற்றும் கண்காணிப்பு வழிமுறைகளில் உள்ள இடைவெளிகளையும் காட்டுகின்றன. தண்டனையிலிருந்து விலக்கு அளிக்கும் இலங்கையின் கலாசாரம் இந்த நெருக்கடியை மேலும் சிக்கலாக்குகிறது.

அதிகரித்துவரும் வன்முறை அலையைத் தடுக்க அரசாங்கம் தீர்க்கமான நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம். குற்றவியல் வலையமைப்புகளை அகற்ற காவல்துறையினர் சிறந்த வளங்கள், தொழில்நுட்பம் மற்றும் பயிற்சியுடன் நவீனமயப்படுத்தப்படவேண்டும். நீதித்துறை விரைவான மற்றும் பாரபட்சமற்ற நீதியை உறுதி செய்யவேண்டும், பொதுமக்களின் நம்பிக்கை மேலும் அரிக்கப்படுவதைத் தடுக்க வேண்டும். வேலையின்மை மற்றும் அரசியல் ஊழல் போன்ற ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களைத் தூண்டும் சமூக–பொருளாதார காரணிகளை அதிகாரிகள் நிவர்த்தி செய்ய வேண்டும்.

வன்முறை குற்றங்களை மேலும் கட்டுப்பாட்டை மீற இலங்கை அனுமதிக்க முடியாது. தீர்க்கமாக செயல்படத் தவறுவது குற்றவியல் கூறுகளை மேலும் தைரியப்படுத்துவதோடு, பொதுமக்களிடம் ஏமாற்றத்தையும் அதிகரிக்கும். அரைகுறை நடவடிக்கைகளுக்கான நேரம் முடிந்துவிட்டது.– இப்போது தேவைப்படுவது பாதுகாப்பை மீட்டெடுக்கும், சட்டத்தின் ஆட்சியை வலுப்படுத்தும் மற்றும் நீதி நிலைநாட்டப்படும் என்று மக்களுக்கு உறுதியளிக்கும் ஒரு வலுவான, ஒருங்கிணைந்த பதில்.

## பெண் பணியாளர்களின் பாதுகாப்பு மீதான கேள்வி

# அனுராதபுரம் வன்கொடுமை



அனுராதபுரம் போதனா மருத்துவ மனையில் மார்ச் 10, 2025 அன்று பெண் மருத்துவர் ஒருவர் கொடூரமான முறையில் பாலியல் வன்கொடுமைக்கு ஆளானதைத் தொடர்ந்து இலங்கை அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ளது. மருத்துவமனைவளாகத்திற்குள் நடந்த இந்தச் சம்பவம், மருத்துவ சமூகத்திடமிருந்தும்பொதுமக்களிடமிருந்தும் பரவலான கண்டனங்களையும் எதிர்ப்புகளையும் தூண்டியுள்ளது.

### என்ன நடந்தது?

பொலிஸ் தகவல்களின்படி, பாதிக்கப்பட்டவர் மருத்துவமனையில் கடமையில் இருந்துவிட்டு அந்த வளாகத்தின் உள்ளேயே இருக்கும் மருத்துவர்களின் விடுதிக்குத் திரும்பியபோது பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டார். கல்னேவாவைச் சேர்ந்த 34 வயதான, இராணுவத்திலிருந்து தப்பியோடியவர் என அடையாளம் காணப்பட்ட



சந்தேகநபர், வன்கொடுமைக்கு முன்பாக மருத்துவரை கத்தியைக் காட்டி மிரட்டினார் என்று கூறப்படுகிறது. சம்பவத்திற்குப் பிறகு சந்தேகநபர் மருத்துவரின் இரு அலைபேசிகளையும் கொள்ளையிட்டுக்கொண்டு அந்த இடத்தைவிட்டு ஓடிவிட்டார்,

மருத்துவர் தனது தந்தையிடமும் சக ஊழியர்களிடமும் தகவல் தெரிவிக்க, அவர்கள் உடனடியாக மருத்துவமனை பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் பொலிஸாருக்குத் தகவல் அளித்தனர். செய்தி பரவியதும் ஒட்டுமொத்த இலங்கையும் பேரதிர்ச்சிக்குள்ளானது. சட்டம் ஒழுக்கு அதிகாரிகள் அவசரமாக விசாரணையைத் தொடங்கினர், சந்தேகநபரைக் கண்டுபிடிக்க ஐந்து சிறப்பு போலீஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சர் நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

தீவிர தேடுதல் முயற்சிகளுக்குப் பிறகு, மார்ச் 12 அதிகாலையில் சிறப்பு அதிரடிப் படையினர் சந்தேகநபரை கல்னேவாவில் வெற்றிகரமாகக் கைது செய்தனர். பாதிக்கப்பட்டவரின் திருடப்பட்ட அலைபேசியை மீட்டனர். சந்தேகநபருக்கு அடைக்கலம் கொடுத்து வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் அவரது 37 வயது சகோதரியும் கைது செய்யப்பட்டார்.

தடயவியல் சான்றுகள் சேகரிக்கப்பட்டு வருவதாகவும், சந்தேகநபர் குறித்த மேலதிக விசாரணைகள் நிலுவையில் உள்ளதால் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக காவல்துறை தெரிவித்துள்ளது. சந்தேகநபர் ஏற்கனவே குற்றப் பின்னணி கொண்டவர் என்கிறது பொலிஸ். அவர் குற்றச் செயல் ஒன்றுக்காக நீதிமன்றக் காவலில் இருந்த பின்னர் சம்பவத்திற்கு மிக அண்மையில்தான் விடுவிக்கப்பட்டிருந்தார் என்றும் கூறப்படுகின்றது.

அண்மைக் காலமாகவே இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களும் விலகியவர்களும் பாதாள உலகக் குழுக்களுடன் சேர்ந்துகொண்டு வன்முறையிலும் கொலைகளிலும் ஈடுபடும் போக்கு அதிகரித்துள்ளது. இதனைக் கட்டுப்படுத்தப் போதிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு இருக்கின்றபோதே இந்த வன்கொடுமைச் சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

### போராட்டங்கள் மற்றும் பணிநிறுத்தங்கள்

இந்தச் சம்பவம் நாடு முழுவதும்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர் Kalaikkathir

## பெண்...

4ம் பக்கத் தொடர்ச்சி...........

போராட்ட அலைகளைத் தூண்டியது, மருத்துவர்கள் மற்றும் சுகாதார வல்லுநர்கள் நீதி கோரி வருகின்றனர். அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் (றூனிநுபு) அனுராதபுரம் போதனா மருத்துவமனையில் உடனடி வேலைநிறுத்தத்தை நடத்தியது, தீர்க்கமான நடவடிக்கை எடுக்கப்படும் வரை பணிக்குத் திரும்ப மறுத்துவிட்டது. சந்தேகநபர் கைது செய்யப்பட்டதை அடுத்தே அது தனது போராட்டத்தைக் கைவிட்டது. பாதிக்கப்பட்டவருக்கு நீதி கிடைக்க வலியுறுத்தி அதிகாரிகள் இலங்கை முழுவதும் வேலைநிறுத்தம் செய்தார்கள்.

இந்த சம்பவம் பொது நிறுவனங்களுக்குள், குறிப்பாக இரவு நேரக் கடமைநேரத்தில் பணிபுரியும் பெண்களுக்கு உள்ள பரந்த பாதுகாப்பு பிரச்சினைகளை பிரதிபலிக்கிறது என்று சுகாதாரப் பணியாளர்கள் வாதிடுகின்றனர். இந்தத் தாக்குதல் பொது நிறுவனங்களில் பணிபுரியும் பெண்களின் பாதுகாப்பு குறித்த கவலைகளை மீண்டும் தூண்டியுள்ளது. கண்காணிப்பு கேமராக்கள், அதிகரித்த ரோந்து மற்றும் மருத்துவமனை வளாகங்களுக்குள் கடுமையான நுழைவுக் கட்டுப்பாடு போன்ற சிறந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்று வலியுறுத்துகின்றன.

அரசியல் தலைவர்களும் இந்த விஷயத்தில் தங்கள் கருத்தை தெரிவித்துள்ளனர். நாடாளுமன்றத்தில் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, இந்தத் தாக்குதலைக் கண்டித்து, மருத்துவ ஊழியர்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்த அவசரக் கொள்கை மாற்றங்களைக் கோரினார். இதற்கிடையில், பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, சந்தேகநபரின் இராணுவப் பிரிவினை உறுதிப்படுத்தியதுடன், விரைவான நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் நிகழாமல் தடுக்க பொது நிறுவனங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

### சீர்திருத்தங்களுக்கான அழைப்பு

சிவில் சமூகக் குழுக்கள், பெண்கள் உரிமை ஆர்வலர்கள் மற்றும் அரசியல்வாதிகள் குற்றவாளிக்கு விரைவான மற்றும் கடுமையான தண்டனை வழங்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். குறிப்பாக சுகாதாரம், கல்வி மற்றும் சட்ட அமலாக்கம் போன்ற அத்தியாவசிய சேவைகளில் உள்ள பெண்களுக்கு விரிவான பணியிட பாதுகாப்புச் சீர்திருத்தங்களுக்கு பலர் அழைப்பு விடுத்துள்ளனர்.

பாலியல் வன்முறைக்கு எதிராக ஆளும்தரப்பு வலுவான நிலைப்பாட்டை எடுக்கவேண்டும் என்றும், குற்றவாளிகளுக்கு விரைவான சட்ட நடவடிக்கைகள் மற்றும் கடுமையான தண்டனைகளை உறுதிசெய்யவேண்டும் என்றும் மனித உரிமை அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன. பல ஆர்வலர்கள் மருத்துவமனைகளில் சிறப்பு பாதுகாப்பு வழிமுறைகளுக்கு ஏற்பாடு செய்யப்படவேண்டும் என்கின்றனர். அதாவது பெண் பாதுகாப்புப் பணியாளர்களை அதிகரித்தல் மற்றும் அதிக ஆபத்துள்ள மண்டலங்களில் அவசரகால பதில் நெறிமுறைகள்.

இதற்கிடையில், இதுபோன்ற துயரங்களைத் தடுக்க நீதி மற்றும் முறையான மாற்றங்களைக் கோரி, பொதுமக்கள் சமூக ஊடகங்களில் தங்கள் கோபத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

## உதவி தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான பயிற்சி செயலமர்வு திருமலையில் நடந்தது

(ஹஸ்பர்)

2025 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் கையளிக்கும் நடவடிக்கைகள் மார்ச் மாதம் 17 முதல் 20 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை திருகோணமலை மாவட்ட செயலக புதிய ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.



அதற்கான பயிற்சி செயலமர்வானது உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு நேற்று (வெள்ளிக்கிழமை) திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் டபிள்யு.ஜி.எம். ஹேமந்த குமார அவர்கள் தலைமையில் மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.



கடந்தஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலில் திருகோணமலையில் அமைந்துள்ள விபுலானந்த கல்லூரியில் வாக்கெண்ணல் நடைபெற்றது.

இம்முறை, உள்ளூராட்சி மன்ற தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் 321 வாக்களிப்பு நிலையங்களில் 129 நிலையங்களில் வாக்கெண்ணல் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பயிற்சி செயலமர்வில் திருகோணமலை மாவட்ட உதவி தேர்தல்கள் ஆணையாளர் எஸ்.கே. டி. நிரஞ்சன் மற்றும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களும் கலந்து கொண்டனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# வாகனமொன்றில் கடத்தப்பட்ட எண்ணெய் பரல்கள் சிக்கின

(பாறுக் ஷிஹான்)

கடை ஒன்றின் முன்பாக வைக்கப்பட்டிருந்த எண்ணை பரல்களை வாகனம் ஒன்றில் கடத்திய சந்தேக நபரை கல்முனை தலைமையக பொலிஸார் கைது செய்துள்ளனர்.



அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவில் உள்ள கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் முன்பாக உள்ள பலசரக்குகடை ஒன்றில் வியாழக்கிழமை அதிகாலை எண்ணை பரல்கள் களவாடப்பட்டுள்ளதாக அதன் உரிமையாளரால் முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது.

குறித்த முறைப்பாட்டிற்கமைய கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் இப்னு அசார் ஆலோசணைக்கமைய கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.ரம்சீன் பக்கீர் வழிகாட்டலில் செயற்பட்ட கல்முனை குற்றப்புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான அலியார் றபீக் தலைமையிலான பொலிஸார் விரைந்து செயற்பட்டு மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர் பகுதிக்கு களவாடி எடுத்துச் செல்லப்பட்ட பரல்கள் உட்பட வாகனம் மீட்கப்பட்டதுடன் சந்தேக நபர் ஒருவரும் கைதானார். ஏனைய தப்பி சென்றுள்ள இரு சந்தேக நபர்களையும் சிசிடிவி காணொளிகள் மற்றும் ஏனைய தகவல்களின் ஊடாக பொலிஸார் விசேட தேடுதல் மேற்கொண்டு கைது செய்வதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் குறித்த கொள்ளைச் சம்பவம் இடம்பெற்று சந்தேக நபர் உட்பட களவாடப்பட்ட பொருள்கள் வாகனங்கள் சுமார் 7 மணித்தியாலங்களில் மீட்ட பொலிஸாருக்கு பொதுமக்கள் பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளனர். இதேவேளை களவாடப்பட்ட குறித்த பொருள்களை உடைமையில் வைத்திருந்த சந்தேக நபரும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும் குறித்த சம்பவத்துடன் தொடர்புபட்ட 22 வயதுடைய சந்தேக நபர் மற்றும் ஏறாவூர் மற்றும் செங்கலடி பகதிகளில் மீட்கப்பட்ட சான்று பொருள்கள் யாவும் சட்ட நடவடிக்கைக்காக கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.






# மகுட விருது வழங்கல்

(தில்சாத் பர்வீஸ்)

'முயற்சிக்கு என்றும் முதலிடம்' என்ற வாசகத்தை மையமாகக் கொண்டு பல சேவைகளை நாடளாவிய ரீதியில் வழங்கி வரும் ஆர்.ஜே.மீடியா ஊடக வலையமைப்பின் ஐந்து வருடப் பூர்த்தி மற்றும் மகுட விருது வழங்கல் விழா, ஆர்.ஜே. மீடியா வலையமைப்பின் பணிப்பாளரும், சமூகப்பணி இளம் கலைமாணியும் மற்றும் வானொலி அறிவிப்பாளருமாகிய ஏ. எம். இன்சாப் அவர்களின் தலைமையில் கொழும்பு டவர் மண்டபத்தில் அண்மையில் மிகப் பிரம்மாண்டமாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை, கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில், கௌரவ அதிதிகளாக, சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் தேசபந்து. எஸ்.எல். மொஹம்மது ஹனீபா, ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான என்.எம். அமீன், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபன ஒன்றியத்தின் தலைவரும், சிரேஷ்ட ஒலி, ஒளிபரப்பாளருமான உமர்லெப்பை யாகூப், சமூகப் பணி மற்றும் தேசிய சமூக மேம்பாட்டு நிறுவனத்தின் இயக்குனர் வி. ஜெயரூபன், சிரேஷ்ட உளவியல் ஆலோசகரும், மனநல தத்துவ ஆரோக்கியத்தின் தலைவரும் மற்றும் தேசிய சமூகப்பணி நிறுவனத்தின் ஆராய்ச்சிப் பிரிவின் இயக்குனருமான அஸ்மியாஸ் ஷஹீத், சிரேஷ்ட ஊடகவியலாளரும், தமிழன் பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான சிவா ராமஸாமி, சிரேஷ்ட ஊடகவியலாளரும், கெப்பிட்டல் வானொலி மற்றும் தொலைக்காட்சியின் பொது மேலாளருமான சியாஉல் ஹஸ்ஸன் மற்றும் தேசிய கல்வி நிறுவனத்தினுடைய விரிவுரையாளர் டாக்டர் ஸ்ரீபிரேந்ரன், சிரேஷ்ட ஊடகவியலாளரும், வசந்தம் தொலைக்காட்சி மற்றும் வானொலியின் முகாமையாளர் எம்.எஸ்.எம். இர்பான், சிரேஷ்ட ஊடகவியலாளரும், கெப்பிட்டல் வானொலியின் சிரேஷ்ட முகாமையாளர் ஏ.எல். ஜபீர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபன சிரேஷ்ட ஒளிபரப்பாளரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் மற்றும் இலங்கை ஒலிபரப்பாளர்கள் ஒன்றியத்தின் தேசிய அமைப்பாளருமான இர்ஷாத் எ. காதர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட அறிவிப்பாளரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் முன்னாள் தலைவியுமான புர்கான் பீ இப்திகார், சிரேஷ்ட ஊடகவியலாளரான ஸமீஹா சபீர் மற்றும் ராம் குணா அழகுசாதன மையத்தின் இயக்குனரான குணரத்னம் ஹரிசான்த் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

மேலும் இந்நிகழ்வில், ஊடகம், கல்வி, கலை, இலக்கியம், சுகாதாரம், ஆன்மீகம், சமூக சேவை, சாதனையாளர், இளம் தொழில் முயற்சியாளர் மற்றும் அரச நிர்வாகத் துறை என்ற பத்துத் துறைகளிலும் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு மகுட விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், இதில் ஆர்.ஜே.மீடியாவின் இரண்டு மாத கால ஊடகப் பயிற்சி நெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான கௌரவிப்பு, ஆர்.ஜே. மீடியாவின் போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான கௌரவிப்பு, ஆர்.ஜே. மீடியா உறுப்பினர்கள் கௌரவிப்பு மற்றும் அதிதிகள் கௌரவிப்பு என இந்நிகழ்வு மிகச் சிறப்பாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இந்நிகழ்வில், பல நூற்றுக்கானவர்கள் கலந்து கொண்டமையும் சிறப்பம்சமாகும்.

# வன விலங்குகளை கணக்கெடுக்கும் படிவம் வவுனியாவிலும் விநியோகம்

## கிராம அலுவலர்கள் ஊடாக

மார்ச் 15ஆம் திகதி காலை 8.00 மணி முதல் காலை 8.05 மணி வரை நாடு பூராகவும் நடைபெறவுள்ள வனவிலங்கு கணக்கெடுப்பை மேற்கொள்வதற்கான படிவங்கள் வவுனியா மாவட்டத்தில் கிராம அலுவலர் ஊடாக விநயோகிக்கப்பட்டு வருகின்றது.

இந்தச் செயற்பாட்டை மிகவும் துல்லியமாகவும், திறமையாகவும் நடத்தும் நோக்கில் கமத்தொழில் அமைச்சின் வளாகத்தில் ஒரு செயற்பாட்டு அறை நிறுவப்பட்டுள்ளது.

கால்நடை கணக்கெடுப்பின் போது ஏற்படக்கூடிய ஏதேனும் சிக்கல்கள் குறித்து விசாரிக்க இந்த செயற்பாட்டு அறை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை செயல்படும் என்று கமத்தொழில், கால்நடை வளங்கல், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, ஏதேனும் சிக்கல் இருப்பின், செயற்பாட்டு அறையின் தொலைபேசி எண்ணான 011-2034336 ஐ அழைத்து விசாரணைகளை மேற்கொள்ளலாம் என்று அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

அதற்கமைவாக பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும் வன விலங்குகளின் எண்ணிக்கையைக் குறிப்பதற்காக அரசாங்கத்தால் அச்சிடப்பட்ட படிவங்கள் கிராமஅலுவலர்ஊடாகவிநியோகிக்கப்பட்டு வருகின்றது. அதில் கருங்குரங்கு, குரங்கு, மரஅணில், மயில் என்பவற்றினுடைய பெயர்களகுறிப்பிட்டுகணக்கெடுப்பதற்கான வகையில் படிவம் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. 100

# அராலி சரஸ்வதி வித்தியாலயத்தில் புலமைச் சித்திபெற்றோர் கௌரவிப்பு

மாணவ தலைவர்கள், வகுப்புத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு மற்றும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை -2024 இல் சித்தி பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை மு.ப.11 மணியளவில் அராலி சரஸ்வதி வித்தியாலய கல்லூரியின் முதல்வர் கு.பாலமுருகன் தலைமையில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் வைத்தியர் சு.நித்தியானந்தன்(நிறுவுனர், ரட்ணம் பவுண்டேசன்) அவர்களும், அவர் பாரியார் சரோஜினிதேவி அவர்களும் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்திருந்தார்கள்.

பிரதம விருந்தினர் தனது உரையில், இங்குள்ள இளைஞர்கள், போதைப்பொருள் பாவனையாலும், திறன்பேசி பாவனையாலும் கெட்டு சீரழிந்து செல்லும் போது, இப் பாடசாலையின் பதின்ம வயதினருக்கான, நிகழ்நிலைக் கல்விக்கான சாதனங்களை பெற்றுக் கொள்வது முன்னேற்றமான விடயம் என்பதுடன், இதனை இம் மாணவர் சமூகம் வினைத்திறனாகப் பயன்படுத்துவது, அராலி மண்ணிற்கு கிடைத்த சிறந்த பொக்கிஷம் எனக்குறிப்பிட்டார்.

# கிளிநொச்சி சேவைச் சந்தை பிரச்சினை பற்றி வடக்கு ஆளுநருடன் பேசித் தீர்வு காணப்படும்

## கடற்றொழில் அமைச்சர் உறுதி

கிளிநொச்சி சேவைச்சந்தை வியாபாரிகளின் கோரிக்கை சம்பந்மாக ஆளுநர் உள்ளிட்ட அதிகாரிகளிடம் பேசப்படும் எனக்கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

மூன்றாவது நாளாக பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் சேவைச் சந்தை வர்த்தகர்களைச்சந்தித்த போதே குறித்த விடயத்தை தெரிவித்தார். 113





# ஈழத்துப் பெண் கவிஞர்களின் கவிதைத் தொகுப்பு வெளியீடு

கடந்த 16 ஆண்டுகளாக தமிழ்நாட்டில் இருந்து கவிதைக்காக வெளிவந்து கொண்டிருக்கும் வளரி கவிதை இதழ் இலங்கையில் வசிக்கும் பெண் கவிஞர்களின் கவிதைகள் அடங்கிய தொகுப்பொன்றை 'பெண் எனும் பெருநதி' என்ற பெயரில் வெளியிட உள்ளது.

மே மாதம் இலங்கையில் நடைபெறவிருக்கும் விழாவில் வெளியிடப்படவுள்ள இந்தக் கவிதைத் தொகுப்புக்கு இலங்கையில் வசிக்கும் பெண் கவிஞர்கள் தங்கள் கவிதைகளைக் கீழ்கண்டவாறு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கவிதைகள் 30 வரிகளுக்குள் அமைய வேண்டும்

பெண்களின் நிலை குறித்த கவிதைகளாக மட்டுமே இருக்க வேண்டும்.

இலங்கையில் வசிப்பவர்கள் மட்டுமே கவிதைகளை அனுப்ப வேண்டும்.

வளரி வெளியிடும்.திபம்

ஒருவர் ஒரு கவிதை மட்டுமே அனுப்ப வேண்டும்

மார்ச் 31 இற்குள் கீழ்வரும் மின்னஞ்சல் முகவரிக்குக் கவிதைகளை அனுப்ப வேண்டும்.

ஒருவர் ஒரு கவிதை மட்டுமே அனுப்ப வேண்டும்

@கீழ்க்கண்ட மின்னஞ்சல் முகவரிக்கு மார்ச் 31க்குள் கவிதைகளை அனுப்ப வேண்டும்

valaripoems09@gmail.com

@மேலதிக விவரங்களுக்கு +91 78715 48146 என்ற புலன எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

வளரி வெளியிடும்
ஈழத்துப் பெண் கவிஞர்களின்
கவிதைத் தொகுப்பு

கடந்த 16 ஆண்டுகளாக தமிழ்நாட்டில் இருந்து கவிதைக்காக வெளிவந்து கொண்டிருக்கும் வளரி கவிதை இதழ் இலங்கையில் வசிக்கும் பெண் கவிஞர்களின் கவிதைகள் அடங்கிய தொகுப்பொன்றை 'பெண் எனும் பெருநதி' என்ற பெயரில் வெளியிட உள்ளது.

மே மாதம் இலங்கையில் நடைபெறவிருக்கும் விழாவில் வெளியிடப்படவுள்ள இந்தக் கவிதைத் தொகுப்புக்கு இலங்கையில் வசிக்கும் பெண் கவிஞர்கள் தங்கள் கவிதைகளைக் கீழ்கண்டவாறு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

@கவிதைகள் 30 வரிகளுக்குள் அமைய வேண்டும்
@பெண்களின் நிலை குறித்த கவிதைகளாக மட்டுமே இருக்க வேண்டும்
@இலங்கையில் வசிப்பவர்கள் மட்டுமே கவிதைகளை அனுப்ப வேண்டும்
@ஒருவர் ஒரு கவிதை மட்டுமே அனுப்ப வேண்டும்
@கீழ்க்கண்ட மின்னஞ்சல் முகவரிக்கு மார்ச் 31க்குள் கவிதைகளை அனுப்ப வேண்டும்
valaripoems09@gmail.com
@மேலதிக விவரங்களுக்கு கீழ்க்கண்ட புலன எண்ணில் தொடர்பு கொள்ளவும்
+91 78715 48146



## அதானி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்றுக்கொள்கிறோம். 2023.08.23ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரத்துடன் அதானி நிறுவனத்துக்குகாற்றாலைமின்னுற்பத்திக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்வதற்காக 2024.12.30ஆம் திகதியன்று கூடிய அமைச்சரவை 2023.08.23 ஆம் திகதி அமைச்சரவை அனுமதியை இரத்துச் செய்துள்ளது. இந்த விவகாரம் தொடர்பில் ஆராய்வதற்கு குழு ஒன்றை நியமித்து அறிக்கையை சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு வழங்குவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் இலங்கையில் காற்றாலை மின்னுற்பத்திக கருத்திட்டத்தில் இருந்து விலகுவதாக இந்தியாவின் அதானி நிறுவனம் இலங்கை முதலீட்டு சபைக்கு அறிவித்துள்ளது. அதானி நிறுவனத்துடனான கருத்திட்டத்தை நிறுத்துவதாக ஆளும்தரப்பு தீர்மானிக்கவில்லை. மாறாக 2023.08.23ஆம் திகதி அமைச்சரவை தீர்மானமே இரத்துச் செய்யபட்டுமீளாய்வுசெய்யப்பட்டுள்ளதுஎன்பது அந்த நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் காற்றாலை மின்னுற்பத்தி கருத்திட்டம் தொடர்பில் இந்தியாவின் அதானி நிறுவனம் தமது நிலைப்பாட்டை அனுப்பி வைத்துள்ளது. அதன் உள்ளடக்கத்தை பரிசீலனை செய்து, ஆளும்தரப்பின் தீர்மானத்தை வெகுவிரைவில் சபைக்கு அறிவிப்போம் என்றார்.

இதன்போதுஎழுந்துமேலதிககேள்விகளை முன்வைத்த நாடாளுமன்றஉறுப்பினர் அஜித் பி பெரேரா, இந்தியா வேறு, அதானி வேறு, அதானி இந்திய ஆளும்தரப்பல்ல, தேசிய மக்கள் சக்தி தேர்தல் பரப்புரை மேடைகளில் அதானி நிறுவனத்துடனான ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதாகக் குறிப்பிட்டது.

இது இலங்கை அரசுக்கும் பிறிதொரு அரசுக்கும் இடையிலான ஒப்பந்தமல்ல, என்பதை அமைச்சர் ஏற்றுக்கொண்டுள்ளார். அரசுக்கும், தனியார் நிறுவனத்துக்கும் இடையிலான ஒப்பந்தமாகும்.

போட்டித்தன்மையானவிலைமனுக்கோரல் இல்லாமல் இரண்டு மடங்கான விலைக்கு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. ஆகவே ஏன் போட்டித்தன்மையான விலைக்கு விலைமனுக்கோரல் செய்யப்படவில்லை என்றார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் குமார ஜயகொடி, அதானி கருத்திட்டத்துக்காக 2023.08.23 ஆம் திகதி வழங்கப்பட்ட அனுமதியில்பலசிக்கல்கள்காணப்படுகின்றன என்பதை ஏற்றுக்கொள்கிறோம். அதுதற்போது மீள்பரிசீலனை செய்யப்படுகிறது என்றார்.

## மிலேச்சத்தனமான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றத்துக்குள் வந்து சந்தேகநபர்களைக் கொலை செய்கின்றனர்.

நீதிமன்றம், நீதிபதிகள்தொடர்பில்இருக்கும் அச்சம், சந்தேகம் முற்றாக இல்லாமல் போயிருக்கிறது. நீதிமன்றங்களில் இடம்பெற்ற இவ்வாறான சம்பவம் மீண்டும் இந்த நாட்டில் இடம்பெறாதுஎனமக்களுக்கும்நீதிபதிகளுக்கும் ஆளும்தரப்பினால் உத்தரவாதம் அளிக்க முடியுமா?

இத்தருணத்திலும்கூட நீதிமன்றத்தில் கொலையை திட்டமிட்ட பெண்ணும், முன்னாள் பதில் பொலிஸ் மா அதிபரும் நீதிமன்ற பிடியாணையில் இருந்து தப்பிக்க தலைமறைவாகியுள்ளனர். பொலிஸாரால்கூட பதில் பொலிஸ் மா அதிபரைக் கண்டுபிடிக்க முடியாதுபோயுள்ளது. ஒட்டுமொத்த நாட்டின் பொது மக்கள் பாதுகாப்பும் சீர்குலைந்துள்ளது.

நேற்று (நேற்று முன்தினம்) பூஸா சிறைச்சாலையின் முன்னாள் அத்தியட்சகர் கொடூரமான முறையில் கொல்லப்பட்டார். கம்பஹா வெலிவேரிய பகுதிகளில் பல துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் நடந்துள்ளன.

அகுனுகொலபலஸ்ஸபகுதியில்இளைஞன் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். மீகஹகிவுல, தல்தென, மூதூர் போன்ற பிரதேசங்களிலும் கொலைகள் இடம்பெற்று வருகின்றன.

இத்தகையபின்னனியில், பொதுமக்களின் பாதுகாப்பு சீர்குலைந்துள்ளது. இதற்கு ஆளும்தரப்புப் பொறுப்பேற்கவேண்டும். வீதிகளில் கொலை, வன்முறை, மற்றும் பயங்கரவாதம் என முழுச் சமூகத்திலும் பயங்கரம் ஆட்கொண்டுள்ளது. இவற்றை கட்டுப்படுத்த, யாரிடமாவது டியூஷன் எடுத்து இந்தக்கொலைஅலையைதடுக்கஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்கவேண்டும்

ஓய்வு பெற்ற பிறகும் சிறைச்சாலை அதிகாரிகளுக்குமிரட்டல்விடுக்கப்படுகிறது. இது இவ்வாறு தொடர்ந்தால் எவ்வாறு தமது அரச பணியாளர்கள் கடமையை முன்னெடுப்பது. இப்படிக் கொலை செய்யும் கலாசாரத்தை நிறுத்த தேசிய வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட வேண்டும்.

இதற்கு எதிர்க்கட்சியினர் ஒட்டுமொத்த ஆதரவையும்வழங்கத்தயாராகஇருக்கிறோம். முன்னாள் பதில் பொலிஸ் மா அதிபரை கண்டுபிடிக்க முடியாவிட்டால் சட்டத்தின் ஆட்சியை எவ்வாறு நிலைநாட்டுவது? எனவே இதனை வேடிக்கையாக எடுத்துக் கொள்ளாமல் தீர்வுகளை வழங்குமாறு கேட்கிறோம் என்றார்.



# ஆட்சியாளர்கள் மாறினாலும் காட்சி எதுவும் மாறவில்லை

## வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கத் தலைவி வேதனை

ஆட்சியாளர்கள் மாறுகின்றபோதும் எவருமே காணாமல் ஆக்கப்பட்டவர்களது விடயம் தொடர்பில் கவனம் செலுத்தவில்லை என திருகோணமலை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கத்தின் தலைவி நாகேந்திரன் ஆஷா தெரிவித்துள்ளார்.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் சங்கத்தின் தலைவி நாகேந்திரன் ஆஷா மேலும் தெரிவிக்கையில் -

புதிய ஆட்சியாளர்கள் மாறிவருகின்றபோதிலும் தமது குரலுக்கு எவருமே செவிசாய்க்கவில்லை. தமது தொடர்ச்சியான போராட்டங்களின்போது தமது பக்கமாக நின்ற அனுர அரசாங்கமானது தற்போது ஆட்சிக்கு வந்த பின்னராக காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத்தில் மௌனம் சாதிக்கின்றது.

காலங்கள் மாறுகின்றபோதிலும் எமது நாட்டில் தொடர்ச்சியாக ஆட்சியாளர்கள் மாறிவருகின்ற போதிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களது நிலைமை தொடர்கதையாகவே காணப்படுகின்றது.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத்தேடி வீதியில் இறங்கி பெண்கள் தொடர்ச்சியாக போராடிக்கொண்டிருக்கும் இந்த நிலையிலே தற்போது அத்தியாவசிய பொருள்களது விலைகளும் குறைந்தபாடில்லை. ஆகையால் தமக்கு எங்கு பார்த்தாலும் இன்னல்கள் நிறைந்ததாகவே காணப்படுகிறது.

அதுபோலவே வெளிநாடுகளுக்கு பணிப் பெண்களாக வேலைபார்க்கச்செல்லும் பெண்களது நிலமைகளும் அவர்களது பிள்ளைகளது வாழ்வும் தொடர்ச்சியான இன்னல்களை சந்திக்கும் நிலையாகவே காணப்படுவதுடன் இதிலிருந்து பெண்கள் விடுபட்டு தமது வாழக்கையை நடத்த மிகுந்த சிரமங்களுக்கு உள்ளாக வேண்டிய நிலை காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

# சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலைக்கு ஒருதொகுதி படுக்கை விரிப்புகள் கிட்டின

(நூருல் ஹுதா உமர்)



ஏ.வி.எஸ்.ஸ்மார்ட் லங்கா நிறுவனத்தால் சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலைக்கு ஒரு தொகுதி படுக்கை விரிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. குறித்த படுக்கை விரிப்புகளை உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு வியாழக்கிழமை சாய்ந்தமருது வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

வைத்தியசாலை அபிவிருத்தி குழுவின் செயலாளர் எம்.ஐ.எம்.சதாத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீன் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

குறித்த நிகழ்வில் பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிர், சாய்ந்தமருது வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் சனூஸ் காரியப்பர். ஏ.வி.எஸ்.ஸ்மார்ட் லங்கா நிறுவனத்தின் பணிப்பாளர் அஷ்ரப் அலி, வைத்தியசாலை அபிவிருத்தி சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட வைத்தியசாலையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது ஏ.வி.எஸ்.ஸ்மார்ட் லங்கா நிறுவனத்தின் பணிப்பாளர் அஷ்ரப் அலி குறித்த படுக்கை விரிப்புகளை கையளித்தார். சாய்ந்தமருது வைத்தியசாலையின் அபிவிருத்திச் சபையும், சுகாதார சேவை நண்பர்கள் குழுவும் ஏ.வி.எஸ்.ஸ்மார்ட் லங்கா நிறுவனத்திடம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க குறித்த படுக்கை விரிப்புக்கள் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.




# மூன்று வர்த்தக நிலையங்களில் தீ

(கிஷாந்தன்)



நோட்டன்பிரிட்ஜ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹகராபிடிய - ஜம்புதென்ன பகுதியில் மூன்று வர்த்தக நிலையங்களில் தீ பரவல் ஏற்பட்டுள்ளது.

ஹாட்வெயார், மல்லிகைக்கடை மற்றும் மட்பாண்டம் விற்பனை நிலையம் என்பவற்றிலேயே நேற்று அதிகாலை 1.30 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

தீ பரவல் ஏற்பட்ட வர்த்தக நிலைய கட்டடத்தொகுதியின் உரிமையாளர் ஒருவர் எனவும், சம்பவத்தின்போது அங்கு எவரும் இருக்கவில்லை எனவும் தெரியவருகின்றது.

தீ விபத்தில் மல்லிகைக்கடை முற்றாக தீக்கிரையாகியுள்ளது. ஏனைய இரு கடைகளும் பகுதியளவு சேதமடைந்துள்ளன.

மின்கசிவு காரணமாக தீ பரவல் ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# பெண் வைத்தியர் மீதான் வன்கொடுமை ; இலங்கை தேசத்துக்குப் பெரும் அவமானம்

## யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கண்டனம்

சர்வதேசரீதியாகவும் நாடுதழுவிய ரீதியிலும் மகளிர் தினம் தொடர்பான செயற்பாடுகள் நடைபெற்றுவரும் நாள்களில் ஒரு பெண் வைத்தியர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு ஆளாக்கப்பட்ட செய்தி வெளிவந்திருப்பது இலங்கை தேசத்துக்கு அவமானத்தை தருகிறது என யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சேவையாற்றும் பெண் வைத்தியர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டதை கண்டித்து யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வெளியிட்ட அறிக்கையில் இதனைக் குறிப்பிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

காலம் காலமாக இலங்கையில் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பெண்கள் துஷ்பிரயோகத்துக்கு ஆளாக்கப்படும் சூழல் நிலவி வருகிறது. அரசுக்கு எதிரான நியாமான புரட்சிகளின் போதும் இன விடுதலைப் போராட்டத்தின் போதும் நூற்றுக்கணக்கான பெண்கள் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றார்கள்.

பாலியல் துஷ்பிரயோகம் என்பது இனமுறுகலில் ஆதிக்கத்தனத்தை வெளிக்காட்டும் அங்கீகரிக்கப்பட்ட கருவியாக பயன்பட்டது. அதனால் ஏராளமான தமிழ்ப் பெண்கள் பாதிக்கப்பட்டார்கள். அவற்றுள் வெளிவந்த கதைகளை விட சமூக கலாசார இரும்புக் கதவுகளைத் தாண்டி வெளிவராத செய்திகள் ஏராளம்.

இன்றும் அனுராதபுரத்தில் பெண் வைத்தியர் ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு முகங்கொடுக்க வேண்டியேற்பட்டிருப்பது கவலையளிக்கிறது. இச்செயல் மிகுந்த கண்டனத்துக்குரியது.

இச்செயலுடன் தொடர்புடைய சந்தேக நபர் இராணுவத்தில் இருந்து தப்பியோடிய ஒருவர் அல்லது முன்னாள் இராணுவ வீரர் என அறியக்கிடைக்கின்றது. அவரது பின்புலம் இலங்கை இராணுவத்தினர் பெண்களைக் கையாண்ட பல பாதகமான முன்னைய சம்பவங்களையும் தற்போது ஞாபகப்படுத்தி வருகின்றது.

போர் நடைபெற்றபோது போரின் ஓர் ஆயுதமாக பாலியல் துஷ்பிரயோகம் இடம்பெற்றதுடன் அது தொடர்பில் அலட்சியமும் செய்யப்பட்டது. அந்த அலட்சியம் பெண்களுக்கு எதிரான துஷ்பிரயோகம் குறித்து அச்சமற்ற சூழலை சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் விதைத்திருக்கின்றது.

இவ் விடயங்கள் தொடர்பாக சர்வதேச மன்னிப்புச் சபை மற்றும் சனல் 4 உள்ளிட்ட தரப்புக்கள் வலுவாக சுட்டிக்காட்டிய போதும் அது குறித்து கருத்தில் எடுக்கப்படவில்லை. அதன் தொடர்ச்சியாகவே அநுராதபுர சம்பவத்தைப் பார்க்க வேண்டியுள்ளது.

இந்த நாட்டின் தொழில்படையில் அதிக சதவீதத்தினர் பெண்கள். அவர்கள் தொழில் சார்ந்து உள்ளக குடிபெயர்வுக்கு கட்டாயப்படுத்தப்படுகின்றபோது அவர்களது பாதுகாப்பு குறித்து அதிக கரிசனை கொள்ளவேண்டும். அது போன்று போர் நடைபெற்றபோது எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக சேர்த்துக்கொள்ளப்பட்டு ஒழுங்குமுறைப்படுத்தப்படாத தொழில் நெறிமுறையால் இராணுவத்தை விட்டு விலகியவர்களால் நாடு முழுவதும் பல்வேறு குற்றச்செயல்கள் நடைபெற்றுவருகின்றன. இவை குறித்து உடனடியாக கவனம் எடுக்க வேண்டும். இது பல்வேறு பாதகமான சூழ்நிலைகளை முற்கூட்டி தவிர்க்க வாய்ப்பளிக்கும்.

அநுராதபுர சம்பவம் ஆட்சியாளர்களுக்கும் பாதுகாப்புத் துறையினருக்கும் அவர்கள் முன்னுள்ள அவசரமான பணியை ஞாபகப்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினராகிய நாம் பெண் மருத்துவர் ஒருவர் பாலியல் ரீதியாகப் பாதிக்கப்பட்ட சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம். இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மருத்துவருடன் ஆத்மார்த்தமாக நமது சங்கம் துணை நிற்கின்றது. சட்டம் மற்றும் நீதித்துறையினர் இச்சம்பவம் தொடர்பில் மட்டுமன்றி இது போன்ற முன்னைய சம்பவங்கள் தொடர்பிலும் அதிக கவனம் எடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம். சட்டங்களை புதிதாக உருவாக்குவதற்கு அப்பால் இருக்கின்ற சட்டங்களை முறையாக அமுல்படுத்துவது குறித்து பலமான பொறிமுறைகள் உருவாக்கப்படவேண்டும். நாட்டை முன்னேற்றுவதற்கு மக்கள் அச்சமின்றி வாழக்கூடிய மனநிலையை உருவாக்குவதே முதல் படியாகும். இந்த விடயத்தை உரிய தரப்புக்கள் கவனம் எடுக்கும் என நம்புகின்றோம். - என்றுள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir

# வடக்கு கிழக்கில் நெல் அறுவடை ஆரம்பிப்பதற்கு முன் அரசு நெல்லின் நிர்ணய விலையை அறிவிக்கவேண்டும்

## அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பை கோரிக்கை

(தில்சாத் பர்வீஸ்)

நமது நாட்டில் முக்கியமான துறையான விவசாயம், நீர்ப்பாசனம், காணி, கால்நடை அபிவிருத்திதுறைக்கான குழுநிலைவிவாத்தில்கலந்து கொண்டு உரையாற்றுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். கடந்த காலம் ஆட்சியில் இருந்த ஆட்சியாளர்கள் நமது நாட்டு விசாயிகளுக்கு எதிராக செயற்பட்ட காரணங்களால் ஆட்சியிலிருந்து மாற்றப்பட்ட வரலாற்றை நாம் கண்டு கொண்டோம். எனவே, புதிய அரசாங்கம் எமது நாட்டில் வாழும் விவசாயிகளுக்கான நல்ல விடயங்களை செயற்படுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார் .

இன்று சபையில் உரையாற்றிய பிரதி அமைச்சர் நாமல் குமார நமது நாட்டில் நெல்லின் விலையை உச்ச விலைக்கு கொண்டு வந்ததாக தெரிவித்தார். அதற்காக உங்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். ஆனால், வடக்கு கிழக்கு மாகாணங்களில் அறுவடை நடைபெற்ற போது அரசாங்கம் நெல்லின் உத்தரவாத விலையினை அறிவிக்கவில்லை இதனால் வடக்கு கிழக்கு மாகாண விவசாயிகள் நஷ்டத்தினை எதிர்நோக்கினர் எனத் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் கடந்த மகாபோகம் நெல் அறுவடை முடிந்த வேலையில் நெல்லுக்கான நிர்ணய விலையினை அரசாங்கம் அறிவித்தது. இதனால் குறிப்பாக அம்பாறை மாவட்ட விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டதுடன், குறைந்த விலையில் நெல்லினை விற்க வேண்டிய நிலைமையும் ஏற்பட்டது. எனவே எதிர்காலத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் அறுவடை நடைபெறுவதற்கு முன் நெல்லின் உத்தரவாத விலையை அரசாங்கம் அறிவிக்க வேண்டும்.

இது விடயமாக விவசாய, நீர்ப்பாசன, காணி, கால்நடை அமைச்சர் லால்காந்த பதிலளிக்கையில் -

நெல்லின் உத்தரவாத விலையை அரசாங்கம் அறிவிப்பதற்கு முன் அக்கரைப்பற்று பிரதேசத்தில் ஒரு கிலோ நெல்லின் விலை 140 ரூபாவுக்கு விவசாயிகள் விற்பனை செய்தனர். இந்த விலை குறைந்து விடக்கூடாது என்பதற்காகவே அரசாங்கம் ஒரு கிலோ நெல்லிற்கு 120 ரூபா விலையினை அறிவித்ததாக பதில் அளித்தார்.

எமது பிரதேசத்தில் விவசாயிகள் குறைந்த விலையில் நெல்லினை விற்றனர். தேவையெனில் எமது பிரதேச விவசாயிகளை உங்களிடம் அழைத்து வருகின்றேன் என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பை குறித்த அமைச்சருக்கு பதிலளித்தார்.

பொத்துவில் பிரதேசத்தில் ஆமவெட்டுவான், வேகாமம், துக்வெல, கச்சிக்கொடி தீவு, தாராம்பளை, கிரான்கோவை பிரதேசங்களில் அமைந்துள்ள விவசாயிகளின் காணிகளுக்குள் 30 வருட வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடைபெற்ற யுத்த சூழ்நிலையில் விவசாயிகளால் தங்களின் காணிகளுக்குள் செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. கடந்த அரசாங்கமும் ரணில் விக்கிரமசிங்கவும் பொத்துவில் பிரதேச விவசாயிகளின் விவசாய காணிகளை விடுவித்து தருவதாக வாக்குறுதி வழங்கி வாக்குகளை பெற்று ஏமாற்றிவிட்டனர்.



எனவே, புதிய அரசாங்கம் உண்மைக்குஉண்மையானவிவசாயம்செய்யப்பட்ட காணிகளை விடுவிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

இது போன்று தான் வட்டமடு காணி பிரச்சினையும் நீண்ட காலமாக தீர்வு கிடைக்காமல் உள்ளது. வட்டமடு பிரதேசத்தில் தமிழ் முஸ்லிம் விவசாயிகள் உள்ளனர். அதேபோல் கால்நடை உரிமையாளர்கள் தமிழ் முஸ்லீம் மக்கள் உள்ளனர். தமிழ் முஸ்லீம் மக்களுடன் பேச்சுகளை மேற்கொண்டு இப்பிரச்சினைக்கு தீர்வு வழங்க வேண்டும்.

அண்மையில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரால் வட்டமடு பிரதேசத்தில் முஸ்லிம் விவசாயிகளுக்கு சொந்தமான 300 ஏக்கர் காணிகளை விவசாயம் செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டு, பின்னர் இடைநிறுத்தப்பட்டதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே, வட்டமடு காணிப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான ஏற்பாடுகளை விவசாய அமைச்சு மேற்கொள்ள வேண்டும். கடந்த அரசாங்கம் மக்களின் காணிப் பிரச்சினைகளை தீர்க்காமல் இழுத்தடிப்பு செய்ததுடன் விவசாயிகளையும் ஏமாற்றியுள்ளனர். எனவே, புதிதாக ஆட்சியினை பொறுப்பெடுத்த நீங்களும் காலம் தாழ்த்தாது விவசாயிகளின் காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க வேண்டும் என மக்கள் சார்பில் கேட்டுக்கொண்டார் .

இன்று நாடாளுமன்றத்தில் ஒரு முக்கியமான விடயத்தினை நான் தெரிவிக்க விரும்புகின்றேன், நாடாளுமன்றத்தின் கௌரவத்தினை ஆளும்கட்சி, எதிர்க்கட்சி எல்லோரும் ஒன்றிணைந்து பாதுகாக்க வேண்டும். கடந்த அரசாங்க காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த 225 பேரையும் மக்கள் நிராகரிப்பதாக தெரிவித்தனர் என்பதனை நாம் மறந்து விடக்கூடாது.

கடந்த அரசாங்க காலத்தில் நமது நாட்டில் இனவாதம்விதைக்கப்பட்ட நிலையில் இருந்தன. நாடாளுமன்றத்தில் இனவாத செயற்பாடுகள் குறைந்தநிலையில்இருந்தன. இன்று நமது நாட்டில் இனவாதச் செயற்பாடுகள் குறைந்துள்ளது ஆனால், நாடாளுமன்றத்தில் இனவாத செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருப்பது குறித்து நாம் எல்லோரும் கவலைப்பட வேண்டும்.

குறிப்பாக முஸ்லிம் சமூகம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் பகிரங்கமாக கூச்சம் இல்லாமல் இனவாத கருத்துக்கள் தொடர்ச்சியாக விதைக்கப்படுகின்றன.

நாடாளுமன்ற சபாநாயகர், பிரதிச் சபாநாயகர், சபைக்கு தலைமை தாங்கும் தவிசாளர்கள் நாடாளுமன்றத்தில் இனவாத கருத்துக்கள் தெரிவிப்பதை அனுமதிக்க கூடாது.

ஆளுங்கட்சியில் உள்ள அமைச்சர் ஒருவர் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரைப் பார்த்து நாய் என்று கூறும் நிலைமையும், எதிர்க்கட்சியில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரை கரடி என்று பேசுவதும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கௌரவம் இல்லாத செயற்பாடுகள் ஆகும். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும். சிஸ்டம் சேஞ் எனக் கூறி ஆட்சிக்கு வந்த அரசாங்க காலத்தில் நாடாளுமன்றத்திற்குள் இனவாத கருத்துக்கள் தடை செய்யப்பட வேண்டும்.

இப்புதிய நாடாளுமன்றத்தில் ஆளுங்கட்சியின் பெரும்பான்மையான புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கல்விமான்களாகவும், எதிர்க்கட்சியில் பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் கல்விமான்களாகவும், அனுபவம் நிறைந்த நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் உள்ள நிலையில் இவ்வாறான செயற்பாடுகளுக்கு அனுமதி அளிக்கக்கூடாது. இல்லையெனில் இனவாதத்திற்கு நாடாளுமன்றம் அனுமதி வழங்குவதாக அமையும் எனவும் தெரிவித்தார்.

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



# மாணவிகளை தொந்தரவு செய்யும் நபர்கள் தொடர்பில் தகவல் தர பொலிஸ் கோரிக்கை



(நூருல் ஹுதா உமர்)

கல்முனை தலைமையகப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் பொதுப் போக்குவரத்திற்கு இடையூறு செய்பவர்கள் உட்பட அதிக ஒளி மற்றும் ஒலி எழுப்பும் மோட்டார் சைக்கிள் பயன்படுத்தும் நபர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

வியாழக்கிழமை கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புறநகர் பகுதிகளில் ஏற்பட்டுள்ள வீதி போக்குவரத்து சீர்கேடு, கலாசார சீர்கேடு உள்ளிட்டவைகள் தொடர்பான முறைப்பாடுகள் மற்றும் சட்டத்தை உரிய முறையில் அமுல்படுத்துவது தொடர்பிலான கலந்துரையாடல் கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே.இப்னு அசார் அவர்களின் பங்கேற்புடன் ஆரம்பமானது.

பிரத்தியேக வகுப்புகள் ஆரம்பிக்கும் போது அல்லது முடிவடையும் போது பெண் பிள்ளைகளுக்கு தொந்தரவு செய்யும் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஓட்டோவில் பற்றிய தகவல்கள் தெரிந்தால் பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்குமாறும் குறித்த விடயம் தொடர்பில் தகவல் தருபவரின் இரகசியம் பாதுகாக்கப்படும் என இக்கலந்துரையாடலில் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன் அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் அண்மைக் காலமாக மோட்டார் சைக்கிள்கள் திருடுதல், பொதுப் போக்குவரத்தை சீர்குலைத்தல், சட்டவிரோதமாக பொதுப்போக்குவரத்திற்கு பங்கம் விளைவித்தல், தான்தோன்றித்தனமாக வாகனத் தரிப்பு செய்தல், வர்த்தக நிலையங்களின் விளம்பர பலகைகளை பிரதான வீதியின் நடைபாதையில் காட்சிப்படுத்துவதைத் தவிர்த்தல், சட்டவிரோதமாக குப்பைகளை கொட்டுதல், கல்மனை மாநகரப் பகுதியில் மீண்டும் வழமை போன்று ஒரு வழிப்பாதையை மீண்டும் உருவாக்குதல், நீர் தாங்கி காணப்படும் வீதிகளை இனங்கண்டு சீர் செய்தல், கலாசார சீரழிவுகளை தடுப்பதற்கான பொறிமுறைகள், கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்தல் உள்ளிட்டவைகள் இக்கலந்துரையாடலில் ஆராயப்பட்டன.



மேலும் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தை தொடர்பு கொண்டு குறித்த சந்தேக நபர்கள் பற்றிய தகவலை அறிவிக்குமாறும் கேட்டுள்ளனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.03.2025இல் வெளியிடப்பெற்றது